

# தமிழ் இலக்கியங்களில் காலமும் சூழலும்



தொகுப்பாசிரியர்

**ப.பிரதாப்**



“
காலத்திற் கேற்ற வகைகள் அவ்வக்
காலத்திற் கேற்ற ஒழுக்கமும் நூலும்
ஞால முழுமைக்கும் ஒன்றாய் எந்த
நாளும் நிலைத்திடும் நூலொன்று மில்லை
”

சுப்பிரமணிய பாரதியார்

ISBN 8193796381
9788193796382

தமிழ் இலக்கியங்களில் காலமும் சூழலும்
(பன்னாட்டுக் கருத்தரங்க ஆய்வுக்கோவை)

தொகுப்பாசிரியர்
ப. பிரதாப்

உரிமை
ஆசிரியருக்கே

முதற்பதிப்பு
அக்டோபர், 2019

வெளியீடு
தமிழ்த்துறை, என்.ஜி.எம். கல்லூரி, பொள்ளாச்சி

வடிவமைப்பு, அச்சு
பாலகீதா மீடியா, பொள்ளாச்சி, 99761 44451

பக்கங்கள் : 18 + 398 = 416

விலை: ரூ. 450/-

ISBN : ISBN 819379638-1
9788193796382

# 21. திருத்தொண்டர்த்தொகை காலமும் சூழலும்

சு. சதீஸ்குமார்
முனைவர் பட்ட ஆய்வாளர்
தமிழ்த்துறை, என்.ஜி.எம் கல்லூரி,
பொள்ளாச்சி.

உலகில் எழுந்த இலக்கியங்கள் யாவும் மனிதர்கள் வாழும் காலத்தின் சூழ்நிலைக்கு ஏற்ப காலந்தோறும் தோன்றும் இடங்களின் அடிப்படையில் தோன்றுகின்றன. அவ்வகையில் தமிழில் தோன்றிய பக்தி இலக்கியங்களுள் சுந்தரமூர்த்தி நாயனார் பாடிய **'திருத்தொண்டர் தொகை'** தனியிடம் பெறுகிறது. இது தோன்றிய காலத்தையும் தோன்றுவதற்குக் காரணமாக அமைந்த சூழலையும் பற்றி இக்கட்டுரைஆய்கிறது.

## சுந்தரரும் திருத்தொண்டாசுத் தொகையும்

சுந்தரமூர்த்தி நாயனார் 63 நாயன்மார்களுள்ளும் திருமுறை ஆசிரியர்கள் 27 அருளாளர்களுள்ளும் ஒருவராகத் திகழ்கிறார். இவர் பாடிய பாடல்களின் தொகுதி **'திருப்பாட்டு'** என்ற பெயருடன் ஏழாம் திருமுறையாக விளங்குகிறது. இவர் ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். தலங்கள் தோறும் சென்று பதிகம் பாடி தமிழ் பரப்ப வந்த இவர் திருத்தொண்டர் தொகையைப் பாட அவர் வாழ்ந்த சூழல் காரணமாக அமைந்தது.

சுந்தரர் ஒருமுறை திருவாரூரில் உள்ள தியாகராஜப் பெருமானை வழிபடச் செல்லும் போது அங்குள்ள தேவாசிரிய மண்டபத்தில் இருந்து விறன்மிண்ட நாயனார் உள்ளிட்ட சிவனடியார்களை இடையூறு செய்தல் ஆகாது என்று எண்ணி விலகிச் செல்கிறார். இதைக்கண்ட விறன்மிண்ட நாயனார் சிவனடியார்களை சுந்தரர் மதிக்காமல் செல்கிறார் என்று தவறாகக் கருதி சுந்தரரை,

"மருவா நின்ற சிவனடியார் தம்மைத் தொழுது வந்தணையா

தொருவா றொதுங்கும் வன்றொண்டன் புறகு"

(விறன்மிண்டர் புராணம்,பா.497)

என்று கூறி அடியார் திருக்கூட்டத்தில் இருந்து விலகிவிடுகிறார்.

அப்போது அங்கிருந்த அடியார்கள் **'சுந்தரர் சிவபெருமானுக்கு தோழர்'** அதனால் அவர் மீது நடவடிக்கை எடுப்பது தவறு என்றனர். ஆனால், விறன்மிண்ட நாயனார் அடியார்களை மதிக்காமல் சென்று சுந்தரருக்கு சிவபெருமான் அருள் செய்யும் தோழர் என்றால் அந்த சிவபெருமானையும் அடியார் கூட்டத்தில் இருந்து விலக்குகிறேன் என்று கூறி விலக்குகிறார். இதனைப்

".....பிரானாந் தன்மை பிறைசூடிப்

புனாரரவம் புனைந்தார்க்கும் புறகு என்றுரைப்ப"

(விறன்மிண்டர்புராணம்,பா.497)

என்ற அடிகள் எடுத்தியம்புகின்றன. இதை அறிந்த சிவபெருமான் சுந்தரரிடம் **'அடியார்களை போற்றிப் பாடு!'** என்று கூறி,

"தில்லை வாழ் அந்தணர் தம் அடியார்க்கும் அடியேன்"

(திருத்தொண்டர்த்தொகை)

இந்த அடியை முதலாகக் கொண்டு சுந்தரர் திருத்தொண்டர்த் தொகையைப் பாடுகிறார். ஆகவே, இந்தப் பனுவல் தோன்றுவதற்குச் சுந்தரருக்கு ஏற்பட்ட இக்கட்டானச் சூழலே காரணமாக அமைந்தது.

இந்த சூழல் ஏற்பட்டதால் தான் சிவனடியார்களை பற்றிய இந்தப் பனுவல் எழுந்தது. இல்லாவிடில் தோன்ற வாய்ப்பு இல்லாமல் போயிருக்கும்.

### திருத்தொண்டர் திருவந்தாதியின் தோற்றம்

திருத்தொண்டர்த் தொகை ஏழாம் நூற்றாண்டில் தோன்றியிருந்தாலும் தனக்குப் பின்னர் சில நூற்றாண்டுகள் கடந்து

பிற இலக்கியங்கள் தோன்றவும் முழுமுதற் காரணமாக அமைந்துள்ளது. சுந்தரர் பாடிய திருத்தொண்டர் தொகையானது சிவனடியார்களின் பெயரை மட்டுமே பெருமளவில் குறிப்பதாக அமைந்துள்ளது. ஒவ்வொரு அடியார்களின் முழு வரலாறும் அதில் பாடபெறவில்லை.

சுந்தரரின் காலத்துக்குப் பிறகு பதினோராம் நூற்றாண்டில் வாழ்ந்த நம்பியாண்டார் நம்பி திருமுறைகளைத் தொகுக்கும் பணியை மேற்கொள்கிறார். இந்த நம்பியாண்டார் நம்பி சுந்தரரின் திருத்தொண்டர் தொகையை இன்னும் சற்று விரித்து ஒவ்வொரு சிவனடியார்களைப் பற்றியும் ஒரு பாடலை **'திருத்தொண்டரசு திருவந்தாதி'** என்று பாடுகிறார். இப்படி பதினோராம் நூற்றாண்டில் ஒரு நூல் எழுவதற்கு சுந்தரரின் **'திருத்தொண்டத் தொகை'** காரணமாக விளங்கியுள்ளது.

மன்னனை மாற்றும் மாபேரிலக்கியம்

**'அநபாயச்சோழன்' 'சீவகசிந்தாமணி'** என்ற நூலைக் கற்றுத் தடுமாறுகிறான். அப்போது அவனுக்கு அமைச்சராக விளங்கிய சேக்கிழார்,

"மந்திரிக்கு அழகு வரும் பொருள் உரைத்தல்"

(வெற்றிவேற்கை)

என்ற அரசன் காலத்தில் **'பெரிய புராணம்'** என்ற அதிவீரராம பாண்டியனின் வாக்கிற்கு ஏற்ப மன்னன் மயங்கினால் மக்களும் மயங்குவர்.

"மன்னன் எவ்வழிமக்கள் அவ்வழி"

ஆகவே, சோழ மன்னனை திருத்தும் சூழல் சேக்கிழாருக்கு ஏற்படுகிறது. அப்போது சிவனடியார்களின் கதைகளைச் சொல்கிறார். கதைகேட்டுமகிழ்ந்தமன்னன் சேக்கிழாரிடம் **'இக்கதைகளை தாங்களும் புராணமாகப் பாடுங்கள்!'** என்று வேண்டுகிறான். (இதுசெவிவழிச் செய்தி)

## இறைவனின் வாய்மொழி

சேக்கிழாருக்குச் சிவபெருமான் **'உலகெலாம்'** என்று அசரீரியாக அடி எடுத்துக் கொடுக்க அதை முதலாகக் கொண்டு சுந்தரமூர்த்தி நாயனார் பாடிய திருத்தொண்டர்த் தொகையை மூலநூலாகவும், நம்பியாண்டார் நம்பி பாடிய திருத்தொண்டர் திருவந்தாதியை வழி நூலாகவும் கொண்டு பெரியபுராணத்திற்கு மூல நூல் தந்த சுந்தரரையே காப்பியத் தலைவனாக்கி காப்பியம் படைத்தார் சேக்கிழர்.

முதல் நூலையும் வழி நூலையும் அடிப்படையாகக் கொண்டு அவர்கள் வாழ்ந்த ஒவ்வொரு பகுதிக்கும் சென்று களஆய்வு மேற்கொண்டு பின்பு காப்பியம் படைத்துள்ளார் சேக்கிழார்.

## புராணமும் காப்பியமும்

தமிழ் இலக்கிய வரலாற்றிலேயே பூராணமாகவும் காப்பியமாகவும் திகழும் ஒரே நூல் பெரியபுராணம். இத்தகு தகைசால் நூல் ஒரு நாட்டின் மன்னனையும் மன்னனின் வாயிலாக மக்களை நெறிப்படுத்த வேண்டிய காலச் சூழலில் தோன்றி நெறிப்படுத்தியது. சேக்கிழார் பெரியபுராணம் பாடியது தமிழகத்திற்கு காலத்தினால் செய்த நன்றி ஆகும். இது ஞாலம் உள்ள வரை போற்றப்படும். இத்தகு சிறப்பிற்குக் காரணமாகவும் அமைந்தது சுந்தரரின் திருத்தொண்டர்த் தொகையே ஆகும்.

## அடியார் எண்ணிக்கை விபரீதம்

பெரியபுராணத்தில் 63 நாயன்மார்களின் வரலாறு உள்ளது. ஆனால், அதன் மூல நூலான திருத்தொண்டர் தொகையில் 60 நாயன்மார்கள் மட்டுமே பாடப்பட்டுள்ளனர். சேக்கிழார் சுந்தரரையும் அவரது பெற்றோரான சடையனார் மற்றும் இசைஞானியாரையும் தானே நாயன்மார் வரிசையில் சேர்த்து பாடியுள்ளார் என்று திறனாய்வு செய்வோரும் உளர். எனினும், ஒரு போதும் சேக்கிழார் அப்படிச் செய்யவில்லை. மூல

நூலாசிரியர் வழியில் முன்னோர்களைப் போற்றி பாடியுள்ளார். சுந்தரர்,

"என்னவனாக அரந்தடியே அடைந்திட்ட சடைநன்
இசைஞானிக் காதலன் திருநாவலூர்க் கோன்
அன்னவனாய் ஆரூரன்........."

(திருத்தொண்டர்தொகை,11)

என்ற அடிகளில் **'சடையன்'** என்று தன் தந்தையையும், **'இசைஞானி'** என்று தன் தாயையும், **'ஆரூரன்'** என்று தன்னையும் பாடியுள்ளார். ஆகவே, அவர் பாடிய வழியில் இருந்து சற்றும் வழுவாத காப்பியம் செய்துள்ளார் சேக்கிழார் என்பது தெளிவாகிறது. ஆகவே, பெரியபுராணம் எழுவதற்கும் சேக்கிழார் வாழ்ந்த சூழலும் காலமுமே காரணமாக அமைந்துள்ளன. அதற்கு மூலநூலான திருத்தொண்டாசுத் தொகையை எழுவதற்கும் சுந்தரர் வாழ்ந்த காலமும் பாடவேண்டிய இக்கட்டான சூழலும் காரணமாக அமைந்துள்ளன.

## நிறைவாக

திருத்தொண்டர்த் தொகை எழாவிடில் சேக்கிழார் தக்க காலத்தில் பெரியபுராணம் பாடி மன்னனையும் மக்களையும் நெறிப்படுத்தி இருக்க முடியாது. ஆகவே, காலமும் சுழலும் காலம் கடந்து நிற்கும் கருவுலங்களாக கவின்மிகு இலக்கியங்களை படைக்கின்றன. படைப்பாளர்கள் கருவியாக அமைகின்றனர்.